யோக மாலை

பதிப்பு

அ. குருமூர்த்தி

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.
ஜூன் - 2008

யோக மாலை

சுவடியியலும் பதிப்பியலும் என்னும்
பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்படும் பதிப்பேடு

பதிப்பு
அ. குருமூர்த்தி

நெறியாளர்
வீ. அரசு
பேராசிரியர் - துறைத்தலைவர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.

ஜூன் - 2008

"சுவடியியலும் பதிப்பியலும்" என்னும்
பட்டயப் பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

எண்: 53010723

நெறியாளர் சான்றிதழ்

பேரா. வீ.அரசு,
தலைவர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையில் "**சுவடியியலும் பதிப்பியலும்**" என்னும் பட்டயப்பேற்றிற்காக '**யோக மாலை**' என்னும் தலைப்பிலான சுவடியை **அ. குருமூர்த்தி** அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்பு செய்தார் என்றும், இந்த ஆய்வேடு அவரின் சொந்த முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கின்றேன்.

நெறியாளர்,

(வீ. அரசு)

நாள்: - -2008
இடம்: சென்னை-5.

பதிப்பாளர் உறுதிமொழி

அ.குருமூர்த்தி
முதுகலை இரண்டாமாண்டு
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

சுவடியியலும் பதிப்பியலும் என்னும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறைக்கு அளிக்கப்பெறும் **'யோக மாலை'** என்னும் தலைப்பிலான இப்பதிப்பேடு என் சொந்த முயற்சியில் உருவானது என்று உறுதி அளிக்கின்றேன்.

பதிப்பாளர்

(அ.குருமூர்த்தி)

நாள்: - - 2008
இடம்: சென்னை-5.

உள்ளடக்கம்

		பக்கம்
1.	பதிப்புரை	11-19
2.	நன்றியுரை	20-21
3.	யோக மாலை	23-73
4.	பின்னிணைப்பு	
	(i) சொல்லடைவு	74-80
	(ii) பாடற் முதற்குறிப்பகராதி	81-83

பதிப்புரை

தமிழ் இலக்கியத்தில் நாயக்கர் காலத்தை, சிற்றுலக்கியக் காலம் என்று கூறுவர். இக்காலக்கட்டத்தில் தோன்றிய இலக்கிய வகைகளில் ஒன்றுதான் மாலை. இவை அந்தாதி,கோவையுடன் தொடர்புடையதாக கருதுவர். இவற்றில் "மாலை" என்பது அதிக பிரபலம் அடையவில்லை என்பது உண்மை. "மாலை" என்பதை "ஒரு பொருள் குறித்த பல கருத்துகளைப் பலவகைச் செய்யுளில் பாடுவது மாலை" எனக் கருத்துக் கூறுகின்றனர்.

மாலை, கோவை என்ற பெயரிலும் தொன்றுதொட்டுச் சிறு பிரபந்தங்கள் தோன்றி வளர்ந்து வந்துள்ளன. இரட்டை மணிமாலை, மும்மணிக்கோவை, மும்மணிமாலை, நான்மணிமாலை இணை மணிமாலை என்பன இத்தகையன, "மாலை" நூல்களில், காரைக்காலம்மையார் அருளிச் செய்த இரட்டை மணிமாலையே "காலத்தால் சாலப் பழமை வாய்ந்தது. இரட்டை மணிமாலை என்னும் இலக்கிய வகையின் வளர்ச்சி மும்மணிக்கோவை என்னும் இலக்கியத்தைத் தோற்றுவித்ததைப் போன்று மும்மணிக்கோவையின் வளர்ச்சி நான்மணிமாலை என்றும் இலக்கிய வகையைத் தோற்றுவித்தது என்பர். இவை சிற்றிலக்கியங்களின் வளர்ச்சியைக் காட்டுகின்றன.

எம்.ஆர். சிவப்பிரகாசம் பிள்ளை என்பவரால் படியெடுக்கப்பட்ட யோகமாலை என்னும் இத்தாள் சுவடியை சென்னைப் பல்கலைக்கழக கீழ்திசை சுவடி நூலகத்திலிருந்துப் பெற்றுக் கொண்டேன். இந்தமாலை எனும் பிரபந்த நூல் ஒரு மனிதனின் வாழ்க்கையில் யோகம் எவ்வாறு அமையும் என்று விளங்குகிறது. இது எழுதப்பட்ட காலம் மற்றும் ஆசிரியர் பற்றிய குறிப்புகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. இதை பிரதியெடுத்த ஆண்டு 3.4.1956 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எம்.ஆர். சிவப்பிரகாசம் பிள்ளை அவர்களால் சுசாயச ஆண்டு ஆவணி மீ நுயக் எழுதி முடித்தது என்று தனது பிரதியெடுப்பில் குறிப்பிட்டுள்ளார்.

சுவடி அமைப்பு

மாலை பற்றி பல நூல்கள் வெளிவந்துள்ளன. அதில் நான்அறிந்த வரைஇந்தமாலையை யாரும் பதிப்பித்ததாகத் தெரியவில்லை. இச்சுவடியில் எழுத்துக்கள் தெளிவில்லாமாலும் கிறுக்கல்கள் போன்றும் காணப்பட்டன. படித்துப் புரிந்துகொள்வதற்கே கடினமாக இருந்தது. எ-ஏ, ஏ-ஒ போன்று சந்தேகங்கள் ஏற்பட்டது. வாய்ப்பாடு அமைப்புகளும் எழுதுவதற்கு கடினமாக இருந்தது. பிரதி எடுத்துத் தாளில் எழுதப்பட்டுள்ளதால் சுவடியைப் பற்றிய குறிப்பு ஏதும் குறிப்பிடப்படவில்லை.

மாலை - நூல்கள்

1. அங்கமாலை 2. அனுராகமாலை 3. இணை மணிமாலை 4. இரட்டை மணிமாலை 5. உழிஞைமாலை 6. உற்பவ மாலை 7. எண்மாலை 8. காஞ்சிமாலை 9. காப்புமாலை 10. கைக்கிளைமாலை 11. தாண்டகமாலை 12. தாரனகமாலை 13. தானைமாலை 14.தும்மைமாலை 15. நவமணிமாலை 16. நாமமாலை 17. நாண்மணிமாலை 18. நொச்சிமாலை 19. பல்சந்தமாலை 20. பன்மணிமாலை 21. புகழ்ச்சி மாலை 22. பெருமகிழ்ச்சி மாலை 23. மும்மணிமாலை 24. வசந்தமாலை 25. வருக்கி மாலை 26. வாகைமாலை 27. வீரவெட்சிமாலை 28. வேனில்மாலை

மேற்கூறிய நூல்களில் சிலவற்றை மட்டும் நாம் காண்போம்.

மாலை - இலக்கணம்

தமிழில் உள்ள தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களில் 'மாலை' என்பதும் ஒன்று. அதன் ஒருவகை 'இரட்டை மணிமாலை.' இருவேறு மணிகளால் இடைப்பட்ட மாலை போன்று இருவேறு யாப்பு வகைகளைக் கொண்டு அமைவதால் இப்பெயர் பெற்றது. இவண். 'இருவேறுயாப்பு' என்பது பெரும்பாலும் 'வெண்பா கட்டளைக் கலித்துறை'யைக் குறிக்கும்.

'இரட்டைமணிமாலை' க்குரிய இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல், வெண்பாப்பாட்டியல், நவநீதப்பாட்டியல், பிரபந்த மரபியல், சிதம்பரம் பாட்டியல், இலக்கண விளக்கம். தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், பிரபந்த தீபிகை, சுவாமிநாதம் ஆகியன எடுத்துரைப்பதாக குறிப்பிடுவார்கள்.

சதமணி மாலை

கி.பி. 17ம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்திருந்த மேல் குறிப்பிட்ட தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள் சதரத்ன சங்கிரகம் என்ற வடமொழித் திரட்டு நூலை வடமொழியிலிருந்து மொழிபெயர்த்து 'சதமணிமாலை' என்னும் பெயரால் வெளியிட்டுள்ளார். இந்நூலுக்கு 'ஞானதீட்சை' என்று மற்றொரு பெயரும் உண்டு

தண்டக மாலை

தண்டகம் எனும் சொல் ஆபரணம், கரிக்குருவி, ஒரு வானம், குறிந்தளி,தொண்டை மண்டலம், துரை, வடமொழியினோர் செய்யுள் எனப் பல பொருள் தருவதாகும். இவ்விலக்கிய வகைக்கு முத்துவீரியம், பிரபந்த தீபிகை, பிரபந்த தீபம், தொன்னூல் விளக்கம் ஆகியன இலக்கணம் கூறுகின்றன.

'வெண்பா வான்முந் நூறுவிரிப்பது
தண்டக மாலையாஞ் சாற்றுங் ஜாலே'

- முத்துவீரியம் : 1068

'...... வெண்பாமுந் நூறுகவிப்
பாடறண் டகமாலையாம்'

- பிரபந்த தீபிகை : 14

'தண்டக மாலையே தனி வெண்பாவான்
முன்னூறு செய்யுள் மொழிவது எண் புணர்ச்சியே'

- பிரபந்த தீபம் - 41

தண்டகமாலை - வெண்பாவான் முந்நூறு
செய்யுட் கூறுவது இதுவே
புணர்ச்சிமாலை யெனவும் படும்

- தொ.வி. உரை - 203)

என வரும் முத்துவீரியம் உள்ளிட்ட மேற்காட்டிய பாட்டியலார் விளக்கங்களால் முந்நூறு வெண்பாக்களால் அமைவது இவ்விலக்கிய வகை என்பது மட்டுமே புலனாகிறது. தொன்னூல் விளக்கம், இவ்விலக்கிய வகைக்குப் புணர்ச்சிமாலை எனும் மற்றும் ஒரு பெயரைச் சுட்டுகிறது. பிரபந்த தீபமும் இவ்வகைக்குப் புணர்ச்சி மாலை எனும் பெயரும் உண்டென்பதைக் குறிப்பால் உணர்த்துகிறது.

தாரகைமாலை

தாரகை மாலை எனும் இலக்கிய வகையின் இலக்கணத்தைப் பழம்பெரும் பாட்டியல் நூலான பன்னிரு பாட்டியலும் விளக்கியுள்ளது. அந்நூல்

"இரண்டு பொருள்புணர் இருபத் தெழுவகைச்
சீரிய பாட்டே தாரகை மாலை"

- பன்னிரு பாட்டியல் -193

எனும் விதியான், 'இருபத்தேழு பாடல்களால் இரண்டு பொருள் புணர யாக்கப் பெறுவது தாரகை மாலை' என்று கூறுகிறது. பத்தினிப் பெண்டிரின் தெய்வத் தன்மையைப் புகழ்ந்து உரைக்கும் பாடற் பொருண்மை உடைய இலக்கிய வகை தாரகை மாலையாகும். இலக்கண விளக்கம் பாடு பொருண்மை மற்றும் யாப்பு வகை ஆகியனவற்றை மட்டுமே சுட்டுகிறது.

"வகுப்பால் கற்புடை மகளிர்க்கு உள்ள
தகைத்திறம் கூறுதல் தாரகை மாலை"

- இலக்கண விளக்கம் - 867

வெண்பாப் பாட்டியல் தாரகை மாலையின் பாடுபொருள், யாப்பு வகை ஆகியன குறித்துத் தெளிவுபடுத்துகிறது.

"ஓதுசந்தத் தாலுரைத்தல் ஒண்தா ரகைமாலை
கோதிலாக் கற்பிற் குலமகளை - நீதிசேர்
மங்கல வள்ளை வகுப்பொடு வெண்பாவால்
இங்காமொன் பானென் றிசை"

- வெண்பாப் பாட்டியல் - 54

நவமணிமாலை

நவ (ஒன்பது) மணிகளாலான மாலை என்பது நவமணிமாலை எனும் சொல்லிற்குரிய பொருளாம். நான்மணிமாலை, இரட்டை மணிமாலை முதலான இலக்கிய வகைகளிடத்துப் பொருள்படுமாறே இவ்விடத்தும் மணி என்பதும் மாலை என்பதும் முறையே யாப்பு, நூல் என்றே பொருள்தரும் என்க. எனில், ஒன்பது விதமான யாப்புகள் தம்முள் கலந்து வருவது நவமணிமாலை எனப் பெயர் ஏற்கும் என்பது தெளிவாம்.

காலப் பழமையுடைய பன்னிரு பாட்டியல் நவமணி மாலைக்கானஇலக்கண வரையறையாக,

"பாவே இனமே என்றிவை யிரண்டு
மேவிய வகையது நவமணி மாலை"

- பன்னிரு பாட்டியல் - 163

நாமமாலை மற்றும் புகழ்ச்சிமாலை

நாமமாலை மற்றும் புகழ்ச்சிமாலை எனும் இவ்விரண்டும் இலக்கிய வகைகளும் தலைமக்களைப் புகழ்ந்துரைக்கும் பாடற்பொருண்மை உடையன. இவ்விலக்கிய வகைகளுக்குப் பாட்டியாலர் கூறும் இலக்கணம் குறித்துக் காண்போம். பன்னிரு பாட்டியல்.

'மைந்தர்க் காயின் வஞ்சிப் பல்வகை
நேர்ந்த அடிமயக்கம் நாம மாலை'
- பன்னிரு பாட்டியல் - 176

என நாமமாலைக்கான இலக்கணத்தை உரைக்கிறது.

"ஆடவர் திறந்து வஞ்சியின்னெறு
நாடிய பாதம் மயங்க வைப்பின்
நாம மாலை மற்றது மடந்தையர்க்
காமெனிற் புகழ்ச்சி மாலை யாகும்"

என நூலில் புகழ்ச்சி மலை என்று விளக்கப்பட்டுள்ளது.

தசமணிமாலை

மதுரைவாசி நிரம்ப அழகிய தேசிகர் அருளிய ஞான சம்பந்த குரு தசமணிமாலை என்ற பெயருடைய ஒரு சிறு தோத்திர நூல். ப.அ. முத்துத் தாண்டவராய பிள்ளையால் 1930-ல் அச்சிடப்பெற்றது. இது பத்து பதினான்கு சீர் விருத்தங்களையுடையது. 'நாதாந்த குருவே' திகரந்த குருவே கமலை ஞான சம்பந்த குருவே' என்ற மடமுடையது, இதை நிரம்ப அழகிய தேசிகர் பாடியிருத்தல் இயலாது. அழகியாரும் குருஞான சம்பந்தரும் கமலை ஞானப் பிரகாசரின் சீடர். இவருள் அழகியரே முற்பட்ட சீடர் ஆவார்.

யோக மாலை

யோகமாலை என்னும் பெயர் கொண்ட இந்நூலுக்கான சுவடி சென்னைப் பல்கலைக்கழக கீழ்த்திசைச் சுவடி நூலகத்திலிருந்து எடுக்கப்பட்டது. சுவடி எண்: 6013.

நீதிப்படி நடப்பவர்கள், அகண்ட பிரமத்தை அறிந்தவன். பல நூல் கற்று பொருள் உணர்ந்தவன் யோக மாலையில் இடம் பெறலாம் என காப்பு பாடலைக் கொண்டு காணலாம். ஆசிரியர் இன்னாரெனத் தெரியவில்லை.

நூல் அமைப்பு

பாடல்கள் காப்புக் கொண்டு தொடங்குகிறது. பாடல்கள் அனைத்தும் இரட்டை ஆசிரிய விருத்தம் வகையினை சார்ந்தது. தொடர்ந்து 76 விருத்தங்கள் மனிதனின் பிறப்பு, கருவளர்ச்சி, என்ன நட்சத்திரத்தில் பிறந்தால் எவ்வகையான பெயரை சூட்ட வேண்டும் என கூறப்படுகிறது. இறுதியில் வாழ்த்துப் பாடலுடன் யோக மாலை முடிவடைகிறது.

நன்றியுரை

என்னை இவ்வுலகிற்கு அறிமுகம் செய்த என் அருமை தாய் **அ. லட்சுமி**, தந்தை - **சி. அழகுராஜ்** அவர்களுக்கும், எனது உயிர் தங்கை அ. வாசுகி ஆகியோர்க்கு முதலில் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

சென்னைப் பல்கலைக் கழக தமிழ் இலக்கியத்துறையில் சுவடியியல் மற்றும பதிப்பியல் என்னும் சுவடி பதிப்பிக்க நெறியாளராகவும் இருந்து, ஊக்கம் அளித்த பேராசிரியர் முனைவர் **வீ. அரசு** அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவடியியல் பயிற்சி வகுப்பில், இலக்கணம் தெளிவு பெற வகுப்பெடுத்த முனைவர் **ய. மணிகண்டன்** அவர்களுக்கு என்நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு எழும் சந்தேகங்களை உடனுக்குடன் போக்கும் எனது துறை பேராசிரியர்கள் முனைவர் **கோ. பழனி,** முனைவர் **ஆ. ஏகாம்பரம்** அவர்களுக்கும் மற்றும் எனக்கு பல உதவிகளை நல்கிய அலுவலர்கள் **திரு. சுந்தர், திரு. சங்கரன்** அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னைப் பல்கலைக்கழக சுவடியியல் நூலகத்தில் இருந்து **'யோகமாலை'** என்னும் சுவடியை

வழங்கிய முனைவர் **சௌந்தர பாண்டியன்** (காப்பாட்சியர்) அவர்களுக்கும், மேலும் தேவையான வழிக்காட்டி புத்தகங்களை கேட்கும்போது இன்முகத்துடன் வழங்கிய சுவடி நூலக ஊழியர் அவர்களுக்கும், எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நாள் வரை என் வளர்ச்சிக்கு ஊக்கமூட்டும் எனது பேராசிரியர்கள் முனைவர் **ப. கமலக்கண்ணன்,** முனைவர் **சி. அங்கையற்கண்ணி** அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

எனக்கு இச்சுவடியை பதிப்பிக்க உறுதுணையாக இருந்த **கு. அரவிந்தன், க. அமரேசன், இர. சுரேஷ், தனசேகர், த.சந்திரசேகர், இ.ஜெயப்பிரகாசு, இரா.கமலக்கண்ணன், அ.ரேவதி, சுஜி, வரலட்சுமி** மற்றும் என்னுடன் பயிலும் நண்பர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை சிறப்பாக அச்சிட்டு வழங்கிய டுடே கிராபிக்ஸ் நிறுவனர் **ரெ.பாபு** அவர்களுக்கும், மேலும் சிறப்பாக தட்டச்சு செய்து கொடுத்த **கு.ஆனந்தி** மற்றும் **ப.பாலாஜி** அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அ. குருமூர்த்தி

யோக மாலை

காப்பு

ஆதியை யகண்ட பிரமத்தை யார்க்கு
மரிவரும் பொருளை நிறைந்த
சோதியைத் துரியங் கடந்ததூய் வெளியைத்
தூரதூ ரானந்தச் சுடரை
நீதியா லுன்னை நினைப்பவர் மனத்துள்
நேர்படு நெறியினைக் குறியால்
ஓதிய பலநூ லுள்ப்பொ ருள்தனை
யுணர்த்துவன் யோக மாலையிலே 1

உலகந்தா னென்பது ணர்ந்தவர் மாடென்
றுரைப்ப தோருண்மையைக் கருதி
அலகிலாக் கேள்விக் கரைகடந் தோர்தம்
மருளினா லறித்தொரு படியை
நலமுடைத் தாகத் தீங்குடைத் தாக
நான்சொன் னால் மற்றவர் தாமே
புலமையாய்ச் சொல்லும் பொருளுமாய்க் கொண்டு
புகழ்பட நிறுத்துவ ரன்றோ

முனிவருந் தேவர் மூவரு மாரு
முழுதுணர்ந் தவர்களும் மொழிந்த
பனுவலின் பொருளை யோகமா லைதாய்ப்
பன்னிநூத் தன்பதாய் விரித்து
இனிவருங் காலம் நல்லதுர்க் கறிய
இயம்பினார் இயம்பிய படியே
மனிதருள் ளவர்கள் வழிவழி பிறப்பை
மாற்றலாம் படிவகுத் துரைப்பாம் 2

கண்ணினிற் காணா தவெல்லாம் பொய்யென
கருதுவீர் கருதிட வேண்டாம்
யெண்ணினா னொருவ னின்னது வருமென்
றியம்பினா ரியம்பிய படியே
நண்ணிடக் கண்டோ மாதலா லதுபோல்
நமக்கரி வானதை நல்லோர்
பண்ணிய சுத்தஞா னநூலித னைப்பழு
தன்றுமெய் யென்றே கொண்மின்
மாலையில் வந்தால் கடர்ந்திடு மிருளை
மாற்றிடச் சிறகிலா வான்மீன்
காலையில் வந்தக் கதிரவ னுதையங்
கண்டிடங் கறக்குமாப் போலவே
மேலைவல் வினையில் வந்தபல் பிறப்பை
விடிவிக் கும்மெய்ப் பொருட்டிற
நூலையிங் குரைக்கத் தோன்றுமே மறைநூல்
நுண்பொரு ளுணர்ந்தவர் தமக்கே 3

தழிரினை யெடுத்துத் தாபர நாட்டித்
 தவப்படு கின்றவை யெல்லாம்
கழிவருந் சிந்தைய தனைக்கண் டேனும்
 கருதிடுந் தெய்வமொன் துண்டே
தெழிவரும் படினாம் செப்பினோ முள்ளந்
 திருக்கூறுத் தருட்கடற் கண்ணே
வெழிவரும் பின்னை வினைகழிற் புகாது
 விளங்கிய வீடுகள் பேருமே
அறம்பொரு ளின்பமெனுவைமி வைமூன்றி
 னாதர வுடைறேற் பின்னும்
பிறந்திட வேண்டுமா தலால் லவத்தைப்
 பிறந்தவை யல்லதாம் வீட்டைத்
திறந்தெந் தறிந்தாள் கதனிலே சித்தத்
 தியானதள் பரளுமாற் றெல்லாந்
துறந்தொன் றைப்பார்க் குசோம்பரே பிறவிக்
 கடலினைத் துடைத்திட வல்லார் 4

தமக்குதா மின்னிபி றரைவிட் டாங்கே
 சாதிக் கிலாம்வகைப் பொருள்தாமே
நமக்குநாம் தேர்ந்துபொய் மெய்யிற் புகாமல்
 நன்னெறி சேர்ந்திட வல்லோர்ச்
சுமக்கும் மக்களு தையாதரிப் பவர்போற்
 றேன்றிடாத் தொழிலது முண்டோ
உமக்குநாம் உறுதியு ரைக்கின் றதெல்லா
 மூமனார் கனாவென் றேயுணரின்

மன்னியவ் வளவுதொ ழிலவா வோடும்
வாணிப விச்சைசிற் பங்கள்
யென்னுமிவ் வாறுகரு மத்திலு ளந்திட்டி
யாக்கைக் கேயிரை தனைத்தேடி
தன்னையங் குள்ளபடி யறியா தேடி
சகலமுஞ் சாகின் றதந்தோ
சொன்னவில் வனைத்தும் விடாவிடி லுடம்பின்
றுடர்ச்சியும் விடாதுநாம் சொன்னோம் 5

பதரது போலவு டம்பய னின்றிப்
பலவுந் தானவர்கள் பாற்கற்ற
விதரஞா னங்கள னத்தையு மிழந்து
யினிப்பிற வாதமெஞ் ஞானந்
திதம்வாக் கற்றுக் கற்றபின் னதனைத்
தெரிந்துமுன் செப்பிய நெறியால்
அதரது போக்கவல் லவரன் றோனே
அறிவினை யறிகின் றதவர் தாமே
உற்றவில் யோகமா லையை யுரைப்ப
துணர்ச்சியு மொழுக் கமும்விடாதே
நற்றவ முண்டாய்க் குருவினை யிகழா
நற்குலத் தினின்பிறந் தவர்க்கல்லால்
கற்றறி வின்றிக் கடைக்குல மாகிக்
கருந்தொழி லேபுரிந் துழலும்
மற்றவர்க் கியம்பில் மாதவர் முன்னாள்
வகுத்திட் டசாபம் வந்தெய்தும் 6

ஒன்றெலர் நின்றவு ருவிலா வுருவை
யுரைப்பதற் கெங்ஙன முடனாய்
மென்றமா மலரும் நாற்றமும் போல
விருவினைப் பயன்களுக் கிடனாய்
நின்றமா மாயைப் புணர்ச்சியின் பெருமை
நிலையிலா வாருகாட் டிடவே
சென்றுபே ரொளியாய்ச் சிறந்தெங் கும்நின்ற
திருவரு ளன்றிமற் றுளதோ
பூதமா மைந்தின் றோற்றமு மதனிற்
பொருந்திவாழ் பல்லுயிர் தமது
சாதமு மவற்றின் றலைவார் மனிதர்
சனனமுஞ் சரீரமுஞ் சமைய
பேதமாம் பிரமா திகள்பி றப்பும்
பிரளைய காலமு மிரண்டும்
ஓதினீ ருலகிலு ரைத்தவில் வனைத்தும்
னொழுக் கமுமொ ளிவின்றி யொளிவாம் 7

நிறைந்தெங் கும்நின்ற நின்மலன் றனது
சன்னதி நேர்பட்ட கண்ணே
மறந்தது காலங் காலத் துள்நாம்
பெரியமூ லப்பிர கிருதி
பிறந்தது சிந்தம் புத்தியாங் காரமென்று
செப்புவ துநாற்கர ணங்களும்
கறந்தபா லதனில் நெய்யெனத் தோன்றிக்
கலந்தன கருத்திடை நின்றும்

அந்தநாற் கரணஞ் சரித்திடத் தோன்றிற்
றாகாசம தனிலாகா சஞ்சலிப்பாய்
வந்தது வாயுவா யுவின்சலிப் பால்மரு
வுதீவந் ததுமே தீயின்
பந்தமாக் கெடாதப டியனில்ச் சலமாய்
பரந்தது பரந்தநீர் செறிவால்ச்
சுந்தரம் பாறாய்த் தோன்றிற் நுத்தோன்றித்
தொடர்ந்தமா பூதங் களான 8

ஓசை யேபரிச மொளிசுவை நாற்ற
முடனாய யந்திரி யங்கள்
காசிநிக் கசைந்து கெந்தமுந் தவிரக்
கரந்தது நீரிடை நான்கும்
பேசிய கெந்த மிரதங்கள் தீயிற்
பிரிந்தன வத்துடன் காச்சி
தேசிலங் குடைய வாயுவிக் கில்லைத்
திகழ்வானுக் கோசையே செப்பில்
காலத்திற் றோன்றி யிட்ட மூலத்தின்
கதிரொளி யக்கர முருவாய்
பாலதில் வெண்ணை பயின்றது போலப்
பலவேறு வுதித்தனப்பறத் தென்றாய்
சாலந்தான் பெரிய ஆகாசந் தன்னிற்
றங்கியம் பூதமாய்ச் சமைந்து
ஞாலத்தும் விசும்பு நாகர்தம் முலகும்
நாமவ ருடற்குறிப்பு ரைப்பாம் 9

அகல்தரு வானிற் பிறந்த சத்தத்தி
லச்சர மன்பத் தொன்றுதித்து
புகலுறப் பட்டமொழி யினூடெ மூத்தாய்ப்
புகழ்மறை ஞானமாய்ப் பொலிந்து
பகலிருள் கொடுக்கும் பரிசென வந்து
பகர்ந்தன வில்லையோ சொல்லில்ச்
சகலமு மரியுந் தன்மையு முளதோ
தப்புகள் காணமே யல்லால்
பெரிய பாருக்குப் பிரமனே தெய்வம்
பிரளய நீரினுக் கரியாம்
யெரியுறு மாங்கிக் குருத்திர னென்ப
தீண்டிய காற்றினுக் கீசன்
வரிய வாகாசஞ் சதாசிவ மென்பர்
அனைத்துக்கு மாதியாந் தெய்வந்
தெரிவுரில் சிருட்டி திதிய ழிப்பார்கள்
திகழரி யெனும் ருத்திரனே 10

ஈண்டு மைம்பூதத் தியைந்தன் வைந்து
நான்குமூன் றிரண்டொன்று குணமும்
மீண்டு மொன்றாகிப் பிறந்திட்ட பின்னை
விதிமுறை கோதிசக் கரங்கள்
ஆண்டொரு திங்கள் நாளும் நாழிகையு
மயனுமிந் திரனுமுன் னிட்டார்
மிண்டுபோய் பிறக்குந் தேவரும் பிறகு
மக்களும் யோனிவந் தடைந்தார்

யீண்டிய வண்டம் யெண்ணில் பலகோடி
யிவற்று டனேயு டனாண்டு
நீண்டவர் நீராய் நிலமுத லைந்தும்
நிகழ்ந்தன வென்று கொண்டாடி
தூண்டி டாச்சோதி யனைத்தையுங் கடந்த
தூரதூரா னந்தத் தூரான்
காண்டல் செய்வார்க்குங் கருதல் செய்வாாக்குங்
கருதொணா னைத்தையுங் கடந்தான் 11

அண்டந்தா னொன்றி லரனரிய யன்பா
லமரரு மாகியே படியே
பிண்டமா யனேககம் பிறந்திறந் தவற்றின்
பெருமையும் பேருமா ரறிவார்
யெண்ட ரப்பட்ட யானையே முதலா
யிவற்றிடைப் பிறந்தசிற்றெறும்பின்
உண்டு டம்போடு பேதமு திக்கு
மிடங்கட் குந்தக்கதே வானாள்
அவ்வெனு மெழுத்தாங் கயன்மா மதுதா
னண்டத் தோடுயிர்களைப் படைக்கும்
உவ்வெனு மெழுத்தை யரியென வுணர்க
வுலககெலாங் காத்திரு முணர்கில்
மவ்வெனு மெழுத்தாங்கு ருத்திரன் மாயமா
மற்றவை முற்றவுந் துடைக்கும்
யிவ்வொ ழுத்தாலே யிவர்செய்யுந் தொழில்தா
ளிப்படி யன்றிமற் றுளதோ. 12

ஆலமர வித்தின் சிறுமையு மதன்ற
யலரின் வேர்பெருமையுந் தானே
போலுமப் படியே பண்டள னைத்தும்
பொதிந்து போய் புறநின்றாள் பெருமை
சாலவச் சகத்தால் தெரிவுறா வண்ணஞ்
சகலமும் புக்கு நின்றானைக்
காலமித் தோடு காணமுங் கருத்துங்
கருதிடத்தே கண்டுகொண் டுணர்மின்
நீரிடைப் பிறக்குஞ் சரிப்பன வெல்லாம்
நிற்பன நிலத்திடைத் தோன்றும்
பாரிடை யிரண்டு கையின வாகிப்
பரந்தன பல்லுயி ரனைத்தும்
யூர்வன தனக்கு வாயுவே யுயிராய்
யொண்புலன் திரிவதற் குரியாய்
கார்விசும் பவற்றி னாலையுந் தாங்குங்
காற்கதி யிரண்டையுங் கார்க்கும். 13

பவமவை யனேகம் பிறந்திறந் திளைத்தும்
படைத்துபல் லுயிர்யாக்கை தவிர்த்து
தவமது முன்னஞ் சார்வுட மையனாற்
றக்கமானி டப்பிறப் படைந்தோர்
அவர்பிறக் கின்ற பரிசையும் பின்னை
யளிய வேணும் ஞானன்ததினாலே
சிவமது தன்னை யடைகின்ற படியே
செப்புவன் சிந்தையிற் றெளிவாய்

முன்னம் நாம்சொன்ன பிரிதிவியின் கண்ணே
முளைத்தெழு மூலங்கட் கெல்லாம்
அன்னமே தலையா மதனிட மாகி
யதனிலே யைம்பூத விகாரம்
மன்னிய வுயிரோ டாக்கையு மனமும்
ஞானமு மானந்த மயமும்
மென்னுமிவ் வனைத்துந் தானாகிப் பெண்ணா
ணிருவரு மிசைந்த தோர்காலம் 14

கெற்பபாத் திரத்தில் விளைகின்ற விளைவில்
விழுகின்ற சுக்கில வசையால்
கற்பமாத் திரத்தில் கமல ஞானத்தே
கிடைக்கின்ற காலத்திற் கருவாய்
யற்பமாத் திரத்தே யகப்பட்ட ஞான
சன்னதியே முதம்விந் துருவாய்
சிற்பரஞ் சோதி நாதமோ மரவி
செழுமதித் தாரகைத் திரளாம்
புகப்படா வாய்வு முன்னெய்த் தவத்தால்ப்
புகுதருங் கன்மஞ்செய்த வழிகள்
மிகப்பல தூக்கு மிச்சதி கேட்டு
விதியினால் வந்ததில் வனைத்தும்
அகப்பட நம்மா லறியவும் படாது
அனேகங் கடானுமப் பொழுதே
பதப்படு கருவின் பக்கவே யுளவாய்ப்
பற்றரு விடாது டன்னிற்கும் 15

இத்தனை யுஞ்சென்றி சைந்து டல்ரூப
மிருக்கின்ற படியது சொல்லில்
வித்தொன்று வேறு கூறுகள் செய்து
விதியினா லவற்றி லொன்றதனை
ஒத்திடுஞ் தன்மை யுள்ளதே யதனுள்
ஒடுங்கிய சீவனுந் தாமும்
மெத்தவங் கதனிற் சுத்தினா வெண்டேற்
பின்னையோர் பிண்டமாய்த் திரளும்
அம்முத லாகப் பிரிதிவி யீரெட்
டணிமதிக் கலைதலை யாகித்
கம்முத லாகயிருவத் தஞ்செ ழுத்துங்
கையொடு காலுடம் பாகி
யெம்முத லாகயெழுந் ததோ ருதிர
மிறைச்சியு நிணமென் புமூளை
தம்மு தலாய சுக்கில மாகித்
தாதுகளாய்த் தம்மிள சைந்தே 16

சுக்கிலம் பெருத்தா லாணுரு வாகுஞ்
சுரோணிதம் பெருத்திடிற் பெண்ணாம்
ஒக்குமே லிரண்டு மலியுரு வாகு
முணர்கயிப் படியுட லுருவாய்
புக்கிலா வடிவ மிப்படி யதனூட்
புக்கிநின் றான்வடி வொன்றே
தக்கவிம் மனிதர் தம்முத லாய
சராசர மிப்படித் தழைத்தே

அன்றெலா மொன்றா யிரதசுக் கிலங்க
ளலைகட லாறுபுக் காப்போல்
நின்றுதா னேழா நாளிடை நிரம்பி
நீர்க்கொப் புள்வடிவா யீரேழிற்
சென்றுதான் செறிந்து மூவெழு நாளிற்
றிரண்டு கீழ்நோக்கி யங்குரித்திட்
டொன்றுந் தானுருவுந் தெரிந்திடா வண்ண
மிருக்குந் தானெருதிங் கட்குள்ளும் 17

அறுவது நாள்வந் தடைவதன் முன்னம்
அஞ்சு பேதப்படு மதுதான்
சிறுமயி ரோடுத லைகழுத் துடனாய்ச்
சிறந்தமேல் முதுகுகீழ் முதுகும்
பெறுமதிற் பின்னை மூன்று திங்களிலே
பேணுங்கால் கையவை பிறக்கும்
மறுவிலாத் திங்கள் நான்கும் வந்தடைந்தால்
வளர்ந்திடு மன்னிய விரல்கள்
அஞ்சு திங்கள்த் தானடைதலு முகத்தோ
டழகியசெவி மூக்குக் கண்வாய்
தஞ்சமா முடையு முறுப்புக ளெல்லாஞ்
சமைந்திடுஞ் சட்மாதந்தான் துடங்கில்
பஞ்சு போல்விரலுக் குகிர்பல்லுக் கெகிரிப்
பரிசுடை யொன்பது வாசல்
யெஞ்சு தலின்றித் தோன்றிடு மெழிலி
லிங்கமும் பிராணனு மிசைந்தே 18

சிறப்புட னெட்டாந் திங்களில்ச் சீவ
னுடம்படத் தெளிந்த பின்தன்னைப்
பிறக்கிலும் பிறக்கும் பிறவாதிங் கிருக்கின்
பிறந்தவுள் பவமெலா மங்கே
உறக்கத்தில் இனாப்போ லுணர்ந்தெல்லா மிருக்கு
முடம்பினைத் தவத்தினாற் பெற்றேன்
பிறப்ப தன்முன் னமினிப் பிறவாத
படிசெய்வே னெனவுணர்ந் திருக்கும்
தாயவள் நெஞ்சந் தலையினாற் றாக்கத்
தலைமலை சுமந்ததே யொக்கும்
தீயினும் செப்புக் குடத்தினுள் ளிருக்குஞ்
செய்தியே யுதரத்துள் ளிருக்கை
போய்நெடு நாளும் புக்கதி லிருந்து
புடைபெய யர்ப்பெரு தின்னம்
வாய்கொடு பேசின் மண்ணடுங் காதோ
மற்றந்தக் கருப்படும் வருத்தம். 19

மாதாவி னுதரத் துள்ளுமங் கதனுள்
வளர்கின்ற பிள்ளை நாவியிலும்
ஆதார மொன்றாய்க் கிடப்பதோர் ஞான
மதன்வழி யன்னங்கள் சார்ந்தால்
பாதாதி கேசத் தளவுஞ்சென் றேற்று
பசியொடு தாபமொன் றின்றி
யாதானு மொன்றா யிருப்ப தோருவா
யிப்படியி வளுண்ட தூணாம்

அடுத்தது பிறக்குங் காலம்வந் தளவே
யதோமுக மாகவோர் வாயுவு
வெடுத்திடப் பட்டங்கு யோனியின் வழிவந்
கிழிதரு மீட்டவை யென்சொல்லில்
குடத்தினில் வளர்த்த பூசணிக் காயைக்
குடந்தக ராமல்வாங்கு வார்போல்
அடைத்து தரத்திற் படுந்துய ரந்தா
னொன்று நூறாயிர் மடங்கும் 20

அவற்றை நாளமைந் தவாயு வினாவே
அன்றெனில் விதிவ சத்தாலே
மற்றை யோர்தமக்குத் தெரிவுரு வண்ண
மயக்கிட்டு வாங்கினா ருளரோ
பெற்றதாய் பிழைத்த பரிசுமப் போது
பிள்ளைதான் பிறந்திட்ட வாரும்
சற்றும் நாமறியுந் தன்மையு முளதோ
கனிப்பித்த தெய்வமே யல்லால்
தோயத்துண் மூழ்கி கிடக்குநற் றவர்போல்
தொக்க வைம்புலத் தடக்கி
காயத்து ளிருந்து தியான தற்பராய்க்
காலங்கள் முன்னையு முணரும்
தாய்பக் கல்நின்று கனிக்கின்ற போதத்
தண்மையை விட்டிரும் பின்னை
மாயத்தின் பெருமை கண்ணினாற் காண
மயக்கிட்டு மதியொன்று மில்லை. 21

கீறிடும் வெகுளி தெளிவிலா மயக்கஞ்
சிறப்பிலாங் காரமுள் ளிட்டு
கூறிடுங் குணங்க ளனைத்தும் வந்ததன்பாற்
குறுகிடும் பிறந்தவப் பொழுதே
பாறிடும் நல்ல அறிவுகள் பின்னைப்
பரிணமித் துடலது நிறம்பி
ஊறிடு மண்டை யூனிலச் சரங்க
ளுரைகளாய்ப் பிறப்பிடும் பின்னை
தானந் தமாதி நடுவ திலாத
தண்மையான் சந்நதிக் கண்ணே
வான்வந் தவானில் வகுத்தனவம் பூதம்
வரன்முறை வந்ததற் பின்னை
யூன்வந்த வூனிவயிர் வந்து தோன்றி
யுயரிடையு ணர்வுவந் துணர்வில்
யானென்ப தொன்றுமென தென்படு தான்று
மிசைந்தன வீடெலாவு யிர்க்கும் 22

கரங்களே கையாய் கால்களே காலாய்
கதிகெலும் புருவமே முகடாய்
புரம்பயில் பழுக்கள் பழுவெ லும்பாக
வொன்பது வாசலுண் டாக்கி
நரம்பினாற் கட்டித் தசைமண்ணா லெறிந்து
நாடக சாலையாட்சி சமைத்த
குரம்பையின் நிரமுங் குரம்பையில் வாழுங்
குடிகள்செய் தொழிலுங் கூறிடுவாம்

உடலினோடு யிர்தா னுள்ள வண்ணத்தை
யொழியாம லுணர்ந்திடப் பார்க்கில்
கடலினீ ரெல்லாம் நாழியா லளந்து
கணக்கிடு வாரை யொவ்வாதோ
சடலமாம் பிண்ட வுற்புத்தியை யுரைத்தோஞ்
சரீரமாந் தண்மையிங் கிதனை
விடவொண் ணாதிங்கியா னறிந்ததோர் படியே
விளம்புவன் விரித்திடா தடங்க 23

சுழினையார் நாடி நடுவுச்சி சேருஞ்
சொல்லுங்கா லதன்வழி யேயாம்
அழிவிலா வுயிர்தா னவ்வழி போமென்
றடைத்தது மண்டையா லதன்கண்
ஒழிவிலா வெழுத்து வோங்கார மதன்பா
லுதித்திடு மிதையத்தி லுண்மை
மொழியிலவ் வழியே பிராணனை விட்டு
முடிந்திடில்க் கடந்தனிற் பிறவார்
கிடையிடை மூக்குத் துவாரத்தின்மேலாங்
கெழுவிற் கிடையிலே சுழினை
கடையெ ழுத்தாக நின்றிடு மகார
மதுபோற் பிங்கலை வலத்தும்
பிடையிலே நிற்குமதி லெழுத்து காரம்
பொருந்திய மூன்றுந் தானுணரில்க்
குடையொன்றில் மூன்று காம்பிட் டால்போய்க்
கூடித்தா னுச்சியில் நிற்கும் 24

கண்ணொடு செவிமூக் குற்ற சந்தியிலே
கலந்தது கதிர்மதி யிதழ்மேல்
ஒண்ணிறப் பளிங்கின் சோதியா யுள்ளுக்
குள்ளாகி யோங்கிறால் விரலால்ப்
பண்ணிவைத் தாற்போ லிருப்ப தோரிலிங்கம்
பகர்ந்ததி லுண்டது சுழினை
நண்ணியே யிருக்கும் தன்வழி யுயிரை
நாலுநா லேற்றுவர் நல்லோர்
இப்படி யிசைந்த சந்தியின் கீழே
யிசைந்தது காந்தாரி யென்பான்
ஒப்பிலா வகாரம் அடிநாக் கென்றறிக
வுணர்ந்தி டிலிரதமே கெந்தம்
தப்பிலா வதன்கீழ்த் தியானநாடி யதாய்
நிற்கும தினெழுத் தோங்காரஞ்
செப்பிடி லதன்பால்ச் சிங்குவை நிற்குந்
திகழ்ந்திடு நாதமு மாங்கே 25

பேரிடைப் பிறாணன் அங்குசா வென்று
பிடரியில் நின்றுமூக் கின்கீழ்
யீராருவி ரற்றான் புறப்பட் டங்கதனி
லெண்விரல டக்கமா யியங்கும்
சீரிய செந்தாம ரையிதழ் யெட்டாற்
சிறந்து கீழ்நோக்கிடு மதனுட்
பேர்பெறு மெழுத்து ஓங்காரம தன்பாற்
பிறாணனு மவ்வழி யியங்கும்

இன்ன மங்கேதா னியம்புவண் பேச்சா
யெழுகின்ற தவ்விடத் துதித்து
மன்னிய பிறாணன் மேனோக்கி வலிக்கு
மருவிய வபானன் கீழ்நோக்கி வலிக்கும்
தன்னிய விரண்டுஞ் சமன்செய்யும் வியாநன்
றற்புரு டனவின் பா்டே
உன்னிய விளக்கு ஓங்கார விளக்காய்
உற்றிடு முண்மையின் மூலம். 26

குண்டலி தானங் குறித்து நாம்கூறில்
குடற்கிடற் கின்றதவ் விடத்து
மண்டல மூன்று வினையமா மென்பர்
வசந்தனைக் கீழாக்கி வைக்கும்
உண்ட பச்சணத்தை யுள்ளிலுள் ளிருத்தி
யுதராக் கினியாலுறுப் பித்துப்
பண்டுத ரனோயை ஆசன மெல்லாம்
படைத்தன னாவியின் கீழ்க் கிடக்கும்
யிருட்ட வீசத்துக் கிடைநடு வாகப்
பெரியதோர் சங்கினினிற் குமதன்பால்
இருட்டறை தன்னில் விளக்குகற் றினாப்போல்
யெரிதரு மங்கியும் பிறாணன்
திருட்டமே மலமுஞ் சிறுநீருந் தூக்கிச்
சிறுபணி செய்திடும் பாணன்
பொருட்டிரை யுரைக்கப் புணர்ந்தது புணர்ந்த
போகலுங் காரத்துண் ணிற்கும் 27

காலெலும் பிரண்டுங் களவெலும் பிரண்டுங்
கதிரெலும் பொருகலந்தெடு தடைத்து
மேலாக நால்விரற் கிடையிலே வீணந்தண்டினை
யடைத்துக் கடம்பின்பூப் போலவே நீர்க்கும்
மூலமா யெழுகின்ற வர்தாரம தன்பால்
பொருந்திய விளக்கைமேற் கொடுபோய்
ஓலநாம டக்கிலிங் கத்தின் குழலூ
டேற்றுக பிராணனோ டிசைய
குறியு டைக்கினை ஆதாரத்தின் மேலே
குலாவிய நால்விரற் கிடையில்
அளிகத் தாள்மேலா தாரமென் றதனை
அங்கு நிற்பன வெலாஞ் சொல்லில்
நறவுடைக் கெந்தம் பிரிதிவி பிரமன்
நல்லவச் சரந்தா னோங்காரம்
செறிதரு மங்கி யென்றிவை யைந்தும்
திறண்டந்தத் தேசத்தே நிற்கும் 28

மூச்சதி ரத்தமூ லாதா ரத்தின்
மேலாதா ரத்தினைமொழிகின்
பச்சுதி ரம்பாய்த் தாயறுத் தடைத்த
பழவினாவிக் கமலமென் பதுதான்
இச்சதி ரத்திலி ருப்பன சொல்லில்
யிரதநீ ரரியெழுத்த காரம்
எச்சதி ரர்க்கு மரிவரி தாய
யெழில்கலாங் கனியோடி வையந்தும்

நரகம் துடம்பு நாபிக்கு மேலை
    நல்லவா தாரத்தை யுரைக்கில்
இருதய கமலமென் பதங்க தன்பால்
    யிருந்திட்ட வைந்தையு மியம்பில்
கானுரை யுருவந் தீயெழுத் தகார
    முருத்திர மந்தாகி பற்பம்
சாதமங் குடனாய் நின்றிடும் நெஞ்சிற்
    றானத்திலி வையைந்துங் கூடி 29

ஏதமென றில்லா யிருதய மொன்றில்
    மேலயா தரத்தை யியம்பிங்க்
கோதண்ட மென்று கூறுவர் புருவங்
    கூடிய சந்தாயங் கதுவும்
பேதமொன் றின்றி நின்றிடு மங்கே
    பெரிய காற்றொடு பரிசந்தான்
ஓதிய வெழுத்து ஓங்கார முடனே
    பரமங்கி வானென வுரைக்கில்
இங்கு நாம்சொன் னயிடை புருவத்தின்
    மேலையா தாரத்தை யியம்ப
பிங்கலை முத்தி யென்ப தங்கதனை
    பாலமுத முண்டாகா சமதுதான்
பங்கினாற் சத்தம் பிறந்தது மங்கே
    பகர்ந்திடி லகாரமா மெழுத்து
ஓங்கிய தெய்வந் சதாசிவ மென்றங்
    குரைப்பருச் சந்தலை தன்னை 30

அகாரமே முதலா யச்சர மைந்து
　　மாகாச முதற்பூத மைந்தும்
நிகரி லாமூலா தாரமே முதலாய்
　　நிகழ்த்து மாதார ரங் களாறும்
பகருமாந் தெய்வமைந் தின்றன் னிலையும்
　　பாற்பட மொழிந்த தற்பின்னை
சகலமாய் நின்றவைம் பூதங் கொடுத்த
　　தற்குண மனத்தையு மொழிவாம்
எய்தியநாம் போடிறைச் சிதோலெலும்பு
　　டுயிரிவை பிருதிவி கொடுக்கும்
நெய்யொடு நீணஞ்சி றுநீகொ டுமூளை
　　நெய்த்தசுக் குலம்சுப்பு கொடுக்கும்
மைதனங் காட்சி மயங்கிய வுறக்கம்
　　மருவிய பசிசோம் பென்றிவற்றை
வெய்யதீ கொடுக்கும் மென்றிந்த ஞான
　　விதியினால் விளம்புவர் மேலோர் 31

இலங்கு நீரோதங் தாங்காமல் பிரிதி
　　யிலவுடைம் பரிசமென் றிவற்றை
மலந்திக முடம்பின் வாயுதான் கொடுக்கு
　　மன்னிய யுட்பய மோகங்
கலந்த விக்காமம் வெகுளியு மிலோபங்
　　கருதிடு மாகாசங் கொடுக்கும்
நிலந்தன் னைமுதலா மைம்பூதங் கொடுக்கும்
　　நிகழ்ந்தன விவையைந்து குணமும்

ஓங்கார ரமென்று மோரெழுத் துள்ளே
யுலகெலா மொடுங்குநின் றிவைதான்
நீங்காத மூலாதா ரத்தில் நிற்கும்
நெருப்பின் றன்மண்டல மதுதான்
பாங்காய வேதப்பய னென்று மறையோர்
பரைகின்ற பரைச்சலு மதனைச்
சாங்காலம் பிரம் நாலத்தோ டேற்றித்
தலைவழிப் பிராணனை விடுக 32

அருக்கன் மண்டலமா மிருதய கமலித்
தாயிரத் தெட்டித முண்டாய்
இருக்குமாம் வாழைப் பூவடி வென்ன
வீராறு சத்திகள் சூழத்
திருக்குறத் திண்டோ ளெட்டுமை முகமுஞ்
திகழநின் றிடுமத னுள்ளே
பெருக்கமாம் பிறாண பைனனோ டிசைந்து
பிணித்த சங்கிலிபோல நிற்கும்
பங்கய மலரிற் கன்னிகை மேலே
பதினாறு சத்திகள் சூழ
வங்கையில் வெண்டா மறைமல ரேந்தி
யமுதமுந்தா னுமங்கு டனாய்த்
தங்கிடுந் தலையி னுச்சியின் கீழே
சந்திர மண்டல மதுதான்
இங்கித னோடுங் கூடமுன்பு ரைத்த
யிரண்டு மண்டலமு மென்றறிக. 33

சத்தியந் தானந்த வத்தொடு மௌனம்
தகுபொறை மிகுதிநிச் சயத்தோ
டத்தமொன் றில்லாவ னைத்துஞ் சாத்தீகம்
அரசநற் குணத்தினை யியம்பிற்
புத்தியின் களிப்பு ஆங்கார மேம்பாடு
புணர்ச்சியின் போகமெல் லார்க்கும்
பத்தியா லளித்தல் சித்திர கோபம்
பணிக்கிர கத்துட னைத்தும்
சுளியொடு சோம்பல் தூங்குத லுறக்கம்
துணிவின்மை கண்க்காமி மைத்தல்
எளிவாமுடைமை பாவமே புரிதல்
இயல்பிலாப் பொய்யு ரைத்திடுதல்
வெளிபடா வாட்கை யச்சமென் றின்ன
விளம்பி டிற்றாமத குணமாம்
தெளிவிலா தார்க்குச் செப்பிலோ மிதனைத்
திரிகுணா பேதமென் றறிக 34

இருதய நீ தன்னிலி ருந்திடும் பிறாணன்
யெழிற்பிருட் டத்திலே யபானன்
குரல்வளை குழியில் கொழுவிய சமானன்
குலவிய நாவியிலு தானென்
விகவித்தா னெங்குங் கலந்திருந் தியானன்
விக்கலு முட்க்கலு நாகன்
உரனுடைக் கூர்மனி மைப்பொடு நின்று
ஒளிவின்றிச் செயித்திடு முடலில்

கிரிகரன் முகத்தே நின்றரி சனத்தைக்
கிளர்த்திடுன் தும்மலுடண் டாக்கும்
தெரிவுரூ மூறிகொட் டாவியு தானன்
செய்திடுஞ் தேவதத் தன்தான்
பெரியவப் பிராணன் போனாலு முடலிற்
பிரியாதே நின்றுமூன்று றாநாள்
உருவினை யுதிப்பித் துச்சியைப் பிளந்தே
யோடிப்போந் தனஞ்செயன் பின்னை 35

மலந்திக முடம்பில் மன்னிய நாடி
யெழுவத் தீராயிரமி வற்றுள்
கலந்தன விடையே பிங்கல அழினை
காந்தாரி யசுவினி சிங்குவை யோடு
அலங்கெ லாம்நலம் புருடனி டத்தே
சங்குனி குதமென னிற்கும்
நலந்திகழ் நாடிபத் துமேயி வற்றுள்
நணுகிடும் வாயுக்கள் பத்தும்
பிரிதிவி யப்புத்தேய் வுவாய் வுதான்
பெரியவா காசமென் றைந்தும்
கருதுக பஞ்ச பூதிக மென்று
கலந்த தோத்திரந் தொக்கு
உருவிடை நயனஞ் சிங்குவை யாக்கிராணம்
மோதுபுத் தேந்திரி யந்தான்
மருவியங் கிவற்றின் வழிகளில் நின்று
வாமுந்தன் மாத்திரையு ரைப்பாம் 36

விண்ணிடைத் தோன்றி யோசையுங் காத்தும்
விளங்கின காத்திடைத் தோன்றுங்
கண்ணடைக் காற்றிற் கனலொடு பரிசுங்
கனலிடைற் றோன்றிற்றுச் சொல்லில்
எண்ணிடைப் பட்ட காட்சியும் நீரும்
யெழிலுத கத்திடை யிரதம்
மண்ணிடைத் தோன்றி மண்ணிடைக் கெந்த
மருவுந்தன் மாத்திரையு ரைப்பாம்
வாக்கெலாம் வானின்குணம் பாணித் தொழில்கள்
வாயுவின் குணங்களால் நடக்கும்
போக்கெலா மங்கியின் குணமுதி ரத்துட்
புக்கவை புறப்படப் பண்ணித்
தூக்குத லப்புவின் குணமிலிங் கத்தால்த்
துளைவன பிருதிவியின் குணமரம்
ஆக்கிய கன்மேந்திரி யங்கள் வளர்ந்து
மானமா பூதங்கள் கொடுத்தது 37

ஒன்றினை மனந்தான் நினைந்திடு மதனை
யுணர்ந்தி டும்புத்தி ஆங்காரம்
நின்றதங் கதுவே யென்றிநிச் சயிக்கும்
நிகழ்ந்தி டப்பட்ட வில்வனைத்தும்
சென்று சித்தத்தே யொடிங்கிடு மந்தச்
சித்தஞ் சித்துருவ மாய்நிற்கும்
நன்று தானந்தக் கரணத்தின் செயல்கள்
நாலுந் தானிப்படித் தகைத்தே

மூக்கறி செந்தஞ் செவிய றியாது
மொழிகின்ற மொழியது தன்னை
நாக்க றியாது நாவிர சத்தை
நம்மிடம் பறிவது முண்டோ
நோக்க றியாது பரிசத்தை நோக்குங்
காச்சி தான் செவிய றியாது
ஆக்கை யுள்ளிருந் திங்கைவருஞ் செய்யு
மனத்தையு மனத்தனா ரறிவார் 38

மலைநி லையூடம் மண்ணின்மேல் நடந்து
வழிபோகக் கால்மிக வருந்திப்
பலகாலங் கூடிப்ப திங்காதம் நடக்கப்
பாற்றவு மில்லைநம் மனத்தார்
உலகங் களனைத்து மொருநொடி யளவி
னுள்ளங்கை நெல்லிக்காய் போலப்
பலகலா கப்பார்த் தெல்லா மறந்திட்
டப்போதே யுகம்புகுந் திருப்பார்
செவியா னிற்சத்த யாகாச குணமாஞ்
செலமது தான்றோலில்ப் பரிசம்
புவியி னிற்காத் தீசன் மயமாம்
பொருந்திய கண்காணு மொளிதான்
அவியுரு வங்கிகு ணமுருகத் திரநா
மண்ணாக்கின் சுவையப்பின் குணமாம்
செவியுடை யரியா முதுமூக்கின் கெந்தக்
தாரணி யமைப்படி யதுதான் 39

தேகமாய் நின்ற பூதங்க ளைந்துந்
திரிந்தமாத் திரைக்குளோ ரைந்தும்
போகமாம் புத்தேந் திரியங்க ளைந்தும்
புணர்ச்சிகண் மேந்திரியங் களைந்தும்
ஆகமற் றவைதா னிற்பது மந்தக்
காணாதிகள் நான்குடன் கூடி
சோகமோ கங்கட் கிடவகை யாகிச்
சுகசுக்கியாய் நிற்கும் புருடன்
ஒளிவளர் பளிங்கும் பஞ்சவர் ணங்க
ளுடனடுத் திருப்பினு மருளில்
வெளிபட மாட்டா வெய்யவ னொளியால்
விளங்கிட வேண்டுமற் றதுபோல்
களிவரும் பஞ்சயிந் திரியமுங் கலந்த
புருடனுங் கலந்திருந் திடினும்
விளங்கிட வேண்டுமற்றது போற்றளிவு றுங்குருவின்
சன்னதிபெருக் கால்தெளி வில்லைசேட்டை யுமில்லை
40

மின்னொளி யெண்ணின் மேகத்திற் பிறக்கும்
விளக்கொளி நெருப்பினிற் பிறக்கும்
பொன்னொளி யோடும ணரியொளி யெண்ணில்
பூமியில் வந்தது பிறக்கும்
தன்னொளி யாலேச கலமுஞ் தானாய்
சாட்சியாய்த் தனிநின்ற தொன்றை
யின்னதோ ரொளியோ ரெண்டுமின் றிதனை
யியங்கிட வல்லரோ யிதனை

பஞ்சமா பூதங்கு ணகர ணங்கள்
பரிசுடைத் தெய்வங்க ளனைத்தும்
அஞ்சுந் தான்கூடு மிடத்திலே யுண்டா
லழியும் போதழியு மித்தனையே
கஞ்சமா யிதனை நினைக்கின்ற தல்லால்க்
கையொணா தற்பரம் பொருளாய்த்
துஞ்சும் போதிருந்த மனத்தகத் தாரோ
தோன்றிடார் தூரம்போ யிருப்பார். 41

மனமொன்றை நினைக்க நினைத்த வப்படியே
வாக்கினால் மொழியவம் மொழியை
நனவினங் கலும்பார் செயிக்கின்ற தொழில்தான்
நல்லசாக் கிரத்தின தவத்தை
சினமொன்று கடந்தால் செய்திடாத் தொழிலைச்
செய்தன வாகச்சிந் தித்தல்
கனவென்றே கொள்ளுங் கடஞ்செய்யுந் தொழிலுங்
கனவுமில் லாதிடஞ் சுழுத்தி
கனவென்றே கொள்ளுங் கடஞ்செய்யுந் தொழிலுங்
காலமுத் தோன்றா வின்றித்
தெரிவுரு வண்ணத் துளியா தீதத்தே
சித்தஞ்சென் றொடுங்கிய பதத்தை
பெரியவர் துரியாதீ தமென்று ரைக்கும்
பேற்றுமை துரியமுங் கடந்த
வரியவப் பொருளைத் தற்பாம் பொருளாய்
வினாசியாய் நின்றிடு மதனை. 42

சாக்கிரஞ் சொற்பனஞ் சுழித்தி துரியஞ்
துரியாதீ தமென்று ரைக்கும்
ஆக்கிய வத்தை யஞ்சுந்தான் சென்றால்
கடங்கிடு மந்ததா ரத்தே
வாக்கினா லவற்றை மதித்து நாம் கூறில்
மன்னிய மூலமே யாதி
மூக்கிலே அந்த மாகிநின் றதுவே
முழுதுமாய் நின்ற நல்லறிவு
ஆயுவை யளவிட் டறியலா முபாயம்
அநேகங் களாமவை தன்னில்
வாயுவின் சரிதை தன்னாலே தமது
வாழ்வினை யறியலா மற்றுங்
காயத்து ளுள்ளவுருப் புக்கள் பார்த்துக்
கண்டது சொல்லலா மினியே
யேயவுமு மக்கிங் கெடுத்து ரைக்கின்றே
னின்னந் தானுள்ளன வெல்லாம் 43

உருபத்தி லுள்ளே யுதித்தடங் கிடுமவ
வுயிர்ப்பொடு பிராண றென்றாக
யிருபத் தோராயிரத் தறுநூறு சுவாச
மியங்கிடு மிரவொரு பகலில்
நிருவித்துப் பார்த்தல் நாழிகை யொன்றில்
நிரமம் முன்னுற்றது பதுதான்
சருபத்தி னிடப்பால் நாழிகை யைந்துஞ்
சரிக்குமத் தன்மையே வலத்தும்

அங்கிதன் மேல்மூக் கருகாகில் வாயுவு
வாகாச நடுவடி வாகில்த்
தங்கிய வப்புத் தண்டினிற் சாறிற்
றாரணி யென்னுரைத் தானரிக
விங்கிவை யதன்மேல் வாயுவாயிருக்க
வீண்டிய நாழிகையைந் தொருபாகை
சங்கிர மிக்கின்ற தக்காலத் தையறிகிற்
சரிக்கின்ற யாக்கையில் வெற்றி 44

உத்திரா யணஞ்சங் கிராந்திப் போயேத்
தோரிடத் திருந்துடம் பதனில்
நித்தமா யியங்கும் வாயுவைப் பார்த்ததால்
நிமலநா ழிகையைந் தோர்பகை
சித்திரமா கவியங் கில்நூற் றாண்டாம்
தெளிகா றென்பதே யாகும்
ஒத்தவே ழாகில றுபத்தி ரண்டாம்
ஒள்ளிய வெட்டன்பத் தொன்றுணரில்
ஒன்பது நாழிகை முப்பது மூவான்
டொருபதுக் கிருபத்தெட் டண்டாம்
யெண்பதி னொன்றுக் கிருபத் தையாண்டா
மிருபதுக் கீறாண் டெல்லை
பின்பொரு ளைளேற் பதிற்றாண்டு வாழும்
பேசிடிலிரண் டுநாட்கெட் டாண்டாம்
ஒன்றிய மூன்றுக் கார்ஒரு நான்குக்
கொருநாலாண் டுய்த்தவர் வாணாள் 45

ஓரைந்தேல் மூவாண் டொருபதுக் கீறாண்
டோர்ந்திடும் பதினைந்துநாட் கோறாண்டாம்
சீர்தருமிரு பதுக்கறு திங்களிரு பத்தஞ்
சுக்குமூன் றேயாகுந் திங்கள்
ஓர்தருமி ருபத்தா றோரி ரண்டா
மிருபத்தேழுக்கொரு திங்கள்
சேர்தரு மிருபத் தெட்டுக்கே யிரண்டாந்
திங்கள்யே ழாமிருபத் தொன்பாற்கு
முப்பது நாளாகு பாகையி லியங்கில்
முடிந்திடு மேயொரு நாளில்
அப்படியே தன்மே லொன்றேரி லன்றே
யிறந்திடு மென்றறிந் திடுகத்
தப்பின்றி வாணாள் சாதமே சொன்னோம்
தனைநின் றயோகிக டமக்கே 46

இரவியை யாதல் மதியி னையாதல்
யெழிற்கண் ணொன்றேறத் தன்கையின்
விரலொன்றி நாலேம ரைத்துச் சும்பி
ளித்து காசமே பார்த்தால்
கரந்தொரு வடிவந் தோன்றுமற் றதுதான்
கறுத்திடில் நோயெழப் பாயும்
சிறந்த செந்தழ லுருவது செல்வஞ்
செருமுடி யறிலறு திங்கள்

பிறந்த விளங்கு மண்டலம் விட்டுத்
தோன்றிச் சாதமே வாணாள்
அளவுக் கோரு திங்க ளென்று
சாற்றினன் றக்கவக் குலத்தோன்
தளங்கிர வுமேற்பதி னைந்துநா ளுள் ளங்கை
தான்பினந்திடி லொருநாளே முடியும் 47

சந்திர னாதலி ரவியை யாதல்
தனக்கும் பின்னாகத் தன்னிழலைச்
சுந்தர மாகப்பார்த் துத்தங் கண்ணைச்
சும்பளித்தா காசமே பார்த்தால்
வந்தொரு வடிவந் தோன்று மற்றதுதான்
கருத்திடில் நோயெழப் பாயும்
செந்தழ லுருவஞ் செல்வம தென்க
செழுமுடி யறிலறு திங்கள்
கையினாற் கண்ணின் குவளையைச் சிக்கக்
கடைக் கண்ணால் நோக்குறப் பார்த்தால்
வெய்ய வச்சோதி யெய்திடா தாகி
வீரைந்தாம் பருவமல தொன்பான்
கையினாற் செவியைப் புதைத்தங்கு யிருந்தால்க்
கடலென முழுங்கிடில் வாணாள்
யெய்துமா மந்துவெ ழின்முழக் கிலையேல்
யேழாநாள் முடிந்திடு மென்க. 48

தோயத்தாற் குடத்தை முகப்பரோ குடத்தாள்
றோயத்தை முகப்பரோ சொல்லீர்
ஆயுத்தான் கடத்தை யடையுமோ கடத்தா
வாயுவை யடைவதே யல்லால்
வாயுத்தான் பத்திவி பிதுடல் நிற்கில்
மரணமுன் டோகடத் தார்க்குக்
காயத்தாள் சுத்தியி லாமையாள் றாமே
கழிகின்றா கல்லரோ காணீர்
விளைந்த வைம்புலங்கள் வேரறப் பார்த்து
விருவினைப் பயனால் வருந்துன்பங்
களைந்துகாத் தனைத்யு மொருவழிப் படுத்திக்
கருத்தினைச் சிரத்தின் மேற்பாச்சி
வளைந்ததோர் வில்லில்ச் சரமது கோர்த்து
வல்லவன் குறித்தெய் தாற்போல
துளைந்த ஞானத்தின் சுழியினையின் வழிபோய்ச்
சோதியைச் சேருதல் துரியம் 49

காட்டத் தாலங்கி கடைந்த தினாலே
கருதியப யன்கொள் வார்போல
வாட்டத் தையில்லா மருக்கறுத் தாலே
வாயுவா லங்கியை யெழுப்பி
நாட்டத் தால்நாசி நுனியினை நோக்கி
நடுப்புரு வத்திடை நினைத்தல்
கீட்டத் தாலிருந்த வமுதினை யுண்டா
இறப்பின்றி யென்றுந்தர மிருப்பார்

தாகமும் பசியுமின் றியேயி ருக்குந்
தண்மையை யறியநாம் சாற்றில்
ஆகமப் படியே யுரைக்கின் றேம் பிராண
னையங் கிசையெ ழுத்தால்
யோகமாம் வண்ண மிருதயத் துள்ளே
யிசைவித் துப்பிறமி யங்காமல்
யோகமா யிருக்க வல்லவ ரன்றோ
யிவ்வுலகுள் ளத்தனையுந் தாமிருப்பார். 50

நெத்திக்கு நேரே புருவத்தி னிடையே
நிகழ்தீப மெரிகின்ற தாகப்
பற்றிப் பார்த்தண் ணாந்திருப் பதேயல்லா
லங்கத னாற்பய னென்னோ
கற்றர ணுவதுக ருத்துள்ளே கருதுங்
கருத்தெல்லாங் கடமாய் மாயும்
மற்றும்நா மடையுங் கதியுண்டோ மீண்டும்
வருவதே யல்லது மண்மேல்
கரணங்கள் நான்குங் கடத்தினாற் கிடப்பக்
கனவாய்ப் போய்த்திரி தரக்கண்டோம்
மரணம் வந்திட்ட காலத்து முயிரை
மனமாதி கரணங்க ணீங்கா
கிரணத்தின் பனிநீர் வானிடைத் தோன்றி
மிளவுந் செங்கதி ரோன்றன்
கிரணத்தால் வாங்கப் படுவதே போலும்
கேடிலா வுயிர்போக் குவாயக. 51

பிரமனைப் பிடித்து பேசிய தெய்வ
மனைத்துமிப் பிரதிவி முதலாய்
வரன்மு றைசொன் னமாழத மைந்து
மாளுமென் றறிந்தாலு மிந்த
வுரனுடைக் காயமுண்டு கொண்டி ருந்தாங்
குண்ணத்தான் கருதுமத் தனையே
நானெ னும்பதத் தீதுண் டாகில்
நாசம்வந் திடுதலுந் திடமே
மாத்திரைப் பொழுதிற் பிறந்தி றக்கின்ற
மனிதர்தாம் வாழ்கின்ற வாழ்வு
மூத்திரப் புருடை சுமந்த வாசனத்தை
முகியா வச்சிரமென னினைந்து
கோத்திர முதலாத் துவக்குங் கல்வந்த
துடர்ச்சியில் விழுகின்ற தல்லால்
சாத்திரத்தோடு வேதங்கட் கெட்டாத்
தற்பரம் பொருளினை யடைார் 52

இன்றுசா வாரைநா ளைச்சா விப்பார்
யாவரோ யேழை மானிடவீர்
அன்றுதா னமைந்த வாயுவின் படியே
யனுபவித் தழிவதே யல்லால்
ஒன்றிய மருந்தாய் மந்திரத்தால் மற்றோ
ருபாயத்து லுரைக்கின்ற வுடம்பினாலுலகில்
யென்றுந்தா முழிப்பா ரிடையி ருப்பாரைக்
காட்டீர் இயம்பிய தெய்வமே யல்லால்

துருவமங் குடைசேர் சோதினை சகுனம்
தொக்குந் தன்னிமித் தங்களெல்லாம்
வருவன முன்னஞ் சொல்லுவ தல்லால்
மற்றிட வல்லவோ வதனைப்
பெருமை யங்குடை யபிரமனுயிலும்
பிறைமுடிக் கடவுளா முதலாய்
ஒருவரு மொழிச்ச வொண்ணாத தொன்றை
நம்மாலொ ழிக்கலு மாமோ 53

மண்ணினாற் செய்த தடங்களில் முகந்து
வைத்தநீர் வற்றிய பின்னை
உண்ணநீரின்றி ஒழியு மாபோல
வுற்பவ காலத்தப் பொழுதே
பண்ணினோ னமைத்த வாயுவுக்க ணாள்கள்
பகலிர வாய்க்க ழிந்தற்பின்
எண்ணமொன் றில்லா நித்தயோ பொய்வாழ்
யாக்கை யுள்ளிருக்கு மோசீவன்
தந்தைதா யென்னுமிருவர்தம் மாலுந்
தரப்பட்ட யாக்கை தாமுருவாகி
முந்தவற் கப்போதி யங்கிய வாயு
முரைமுறை வாரவின் குணமும்
வந்தவர்க் குள்ள நாளதும் போக்கி
மாண்டாக்கால் மாள்வதே யல்லால்
யெந்தவிப் பிரமன் படைத்த னம்மை
யிதுவன்றி வேருண்டோ வியம்பீர் 54

பொம்மெ னவீசி யெறிந்த பொம்பரமும்
பொருந்திய குலால சக்கரமும்
தம்விசையத்துத் தளர்ச்சியே யாகித்
தரையிடை வீழுமா போல
அம்மையோ டப்பன் அகப்பட்ட விசைபோய்
யறுமள வுந்தேய்ந் தெய்தும்
நம்வி சைகெட்டு வீழ்வதே யல்லால்
நமனும றுண்டோதன் மைக்கே
சாக்கியர் சமணர் வைணவர் அசிகர்
சாங்சியர் சார்பகறேற் சமயத்தார்
தாக்கிய தவத்தோர் அவருவருந் தாந்தா
மறிந்து பேரிட்டு வெவ்வேறே
நோக்கிய தற்கஞ் சமையங் கடோறும்
வகுத்துக் கொண்டுரைப்ப ரென்றாலும்
நீக்கட வொண்ணாத் தற்பாம் பொருளாய்
நின்ற வொன்றினை யறியாதே 55

வேதம் பொய்யா தென்றிருந்தே னதன்பால்
விரதமென்றா லுயிர் கொல்லும்
பாதக மாகாதென் றுதான் சொல்லிற்
பசுப்படுத்தி யாகமம்பண் ணென்றும்
ஆதலாலி துதான றிவிலாற் குரைத்த
வருநெறி யெமக்கு மானிடவீர்
யீதெலாங் கொண்டு தற்பரம் பொருளை
யெய்தலா முபாயமென் றிருந்தோம்

ஆகாசந் தன்னில டங்கி நின்றிட்ட
அச்சர மைம்படு தந்தந்த
மாகாயந் தன்னில் வாயிலே தோன்றி
மறைமுதல் வாக்காயிற் றன்றோ
போகாவுந் துழன்று வினைவழி விரியும்
புத்தியின் புணர்ப்பன்றோ விதுதான்
காகாவென் றழைக்குங் காகம்போற் கதறிக்
கழியாதே கருத்தாய் மெய்ப்பொருள் 56

சலவுரு வாகித் தாரணி தன்னைத்
தாங்கியும் தழுவியு மளந்தும்
சிலபகல் மண்ணும் விண்ணும் மற்றுள்ள
திசையெங் குஞ்செறிந் துடனின்றும்
பலபடச் செய்த பரிசினா லரியைப்
பாரையுண்டு மிழ்ந்தெடுத் தளந்த
வுலகுண் டானேயென்று ரைப்பர்கள் வாக்கா
லுண்மைதா னிதன்றோ வுணரில்
மாலாதா ரமுந்தி மலர்ந்த பூவின்கண்
வந்தது பிரமன்றா னென்றும்
மேலாய அயன்றன் படைப்பெல்லா மென்றும்
விளம்புவர் மேன்மைநாம் விரிக்கில்
மாலாசென் றுரைப்ப துந்தியை அதுதான்
மலர்ந்த பிரமனென் கின்ற
மூலாதா ரத்தை அவ்விடத் தன்றோ
முழுதுந் தாம்பிறப்பது மொழியில் 57

உந்தியா மதனை மாலக்கி யதன்பா
லுதித்திட்ட மூலாதா ரத்தை
அந்தண னாயபிர மனென் றொருவ
னாக்கி யவன் பக்கல்
சுந்தர லிங்கந் தோன்றிய தொன்றுஞ்
சொல்லுவர் பூரணனாய்த் தொகுத்திட்
டந்தர லிங்கஞ் சூடிட வன்றோ
அலைகளிற் றோன்றியதென் பர்சிலர்தாம்
முக்குணப்பு ரங்கள் சுழுத்தி யாங்காலம்
மூன்றொன்றா யப்பிரிவதன் முன்னே
அக்கணத் தியோக வம்பினா லெழும்பி
அச்சர மொருவிரற் கொண்டு
மிக்கவாங் காரம்வெ குளியுள் ளிட்ட
வசுரரை வேறச் செற்றத்
தெக்கணா மூர்த்தி சிவனையங் கெல்லாந்
திரிபுர மூன்றெய்தா னென்னும் 58

அங்கிசை யென்னும் பிராணவச் சரங்கள்
மூன்றையு மதோமு கமாகச்
சங்கர னென்றுத லைகீழாய்ச் சொல்வர்
அதனை நாமும் சாற்றில்
அங்கவை மூன்று மரனயன் மாலென்
றரிகமற் றவற்றிடை யரீஇல்
யிங்கிவை யிரண்டுந் திருட்டியுந் திதியும்
யிவற்றினை யழித்த லுமாகும்

ஒருயர் கொடியோன் சரித்ததில் வண்ண
மென்று கொண்டேக மாஞ்சிரத்தை
கூறிடும் நெல்லிப் பிரமாண மாகக்
குறைத்த வத்தலையொடு நிறைந்த
சோறு கொண்டுண்டு சுடுகாட்டிற் றுயிலச்
சொல்லியதா தவென் றேயிட்
டாறு திங்களிலே முத்தியை யடைவான்
அபத்தமே சுழிவார்கள் சிலர்தான் 59

உவ்வெனு மெழுத்தே யுடம்பா னவதனா
லுருத்திரன் தேவிபெ ருமையாம்
அவ்வெனு மெழுத்தே யுரிவுரு வாண்மையா
லவனே யப்புமே யாகின்றான்
இவ்வெனு மெழுத்தே யோனியா னமையா
லியம்புவர் பகவதி யென்றும்
யெவ்வுல குந்தானீன் றிட்ட சத்தி
யிதுவன்றோ அண்மையை பாயம்பில்
ஒருவருந் தன்மெய் யுள்ளவா ருணரார்
உதித்த காயத்தினாற் பெண்ணாண்
யிருவருந் தம்மிள சைந்த லாததே
யின்பதுன் பங்கள்கைக் கொண்டார்
கருவரும் பொழுது கண்டன ருண்டோ
காலத்திற் றோன்றி மாயவல்லால்
வருவதும் போவதுமாங் காலமே யன்றி
மற்றில்லைத் தெய்வமென் பாரும். 60

புத்தியாற் பெரியோர் பேதங் களாகப்
புணர்ந்த நூல்மெய் யென்றுகொண்டே
அத்தையா லதனை யாகம மாக்கி
யறுவகைச் சமையமுந் தம்மில்
ஒத்த தொவ்வாதா யொருவர் சொல்லாலே
ஒன்றாய் நின்ற வற்றை
அத்தனை யருக்கன் அரிபுத்த னென்று
அநேகம் பேரிடுவர்கள் சிலர்தான்
அக்கா மாவத றிவீர்மற் றிதனை
அறியலாம் படியுருவாக
மிக்க தாம்புத்தி வித்தாரத்தாலே
வெவ்வேறு வகைதெளிந் திடுவார்
தக்கதிச் சமைய மாறுமிவ் வகையே
சகளமாக் கிடுவாரிடர்க் களத்தே
ஒக்கவொக் குந்தானு யிராகி நின்ற
வொன்றினை யுணர மாட்டார்கள் 61

கட்டினா னொருவன் கண்டது மனத்தின்
களிம்பி னையடக் கினாலன்றி
யெட்டொணா தெங்க ளீசனை யென்றிட்
டியாக்கை யைக்கையற வொறுத்து
பட்டினி யோடும் பனிவெயில் முதலாய்
பலனோன்பாய்ப் பண்ணி மற்றதுபோய்
மட்டர வாசையினால் மயங்கியே கிடப்பறாய்
மடிபெருத் தவேட தாரிகளாய்

உலகினை யொருவன் படைத்த நாளேபல்
லுயிர்களும் சமையத்தாற் படைத்திட்
டலகிலா வுயிர்தான் வையேபோ யெங்கும்
பிறந்திறக் கின்றவோ வன்றேற்
சிலர்வயிற் றின்கண் சிலர்வந்து தோன்றிச்
செத்தவர் பிறப்பரோ வென்னில்
பலபக லாகவரு கின்ற வெய்யோன்
பலரோ மற்றொருவ ரோபகரீர் 62

வேண்டின வுருவ மெய்திட வேண்டில்
விண்ணொடு மண்ணகத் தின்கண்
ணீண்டிய தெய்வமி யற்றுவ தென்றதனை
யிருதயத் திதமாக வைத்துச்
சேண்டொ ருங்கால மதன்கண்ணே வைத்துச்
சித்தத்திற் றியானித்துப் பின்னை
மாண்டிட வல்லார் மற்றெண்றிப் பிறவார்
மகனினை தெய்வத்தை யடைவார்
மரித்தா னென்று ரைக்கும் வார்த்தைதான்
மரணம்வருங் கால்மற்றொன் றைமனத்தால்
உரித்தாக நினைத்துயிர் தோன்றங் கதனை
யுடலாகக் கொள்வர் புக்குயிரார்
கருத்தால் மற்றதற்குக் கலைக்கோட்டு முனிவன்
முன்பிறந்த கதையின்றோ கருதில்த்
தெரித்தாங்கே யொன்று மரணத்தி னெந்தையுஞ்
சிந்தியா திருக்கநற் சிவமாம் 63

உடம்பு நானல்லே னுயிருநா னல்லேன்
உருவிலா ஒருவனா னென்று
திடம்பட வறிந்து சிந்தையிற் றெளிந்து
தியானிப்பும் விட்டு விட்டு
இடம்படச் சொன்ன யாவையு மிகந்தங்
கெய்திய பருவம் வந்திருந்தால்
கடந்தளிற் பிறவார் கருத்தொன் றிலுண்டேற்
கருதியவு ருவம்வந் தெய்தும்
தேசத்தா ரெல்லாங் கொண்டா டப்பட்ட
தெய்வமெய் லாமுள்ள தடவே
பேசில்மற் றந்ததெய் வங்கட மக்கும்
பிறப்பிறப் பிரண்டுந்தா முளவாம்
ஆசையா லவற்றை யடைந்தா வர்தாமு
மதுதெய்வ மழியும் போதழிவார்
நாசமொன் றின்றிநின் றதோர் பொருளை
நாணுகினார் நாசமு மாகார் 64

ஒருவனுக் கொருவன் மத்திர மொன்றை
யுபதேசித் தவறுக்குத் தானே
குருவாகி யவனைக் கும்பிட்டுக் கொண்டான்
குலாவய மந்திர மதனால்
பெருகிய தெய்வமென் றொன்றை நட்டுப்
பிரானென்று தான்கும் பிட்டால்
இருவருந் தாபித்த மந்திர மொன்றோ
யிதுவன்றோ காண்பானா பேதம்

பொன்னினைக் கொண்டு வேண்டின வண்ணம்
பூண்டவன் பணிமற்றை யவற்றை
முன்னைப் பேரொழிய வெவ்வேறு பெயரை
மொழிவர் கள்கற்ப னையாலே
பின்னையு முருக்கி யொன்றான வாரே
பேருமவ் வுருக்களு மாயும்
அன்னை யேடத்த னென்ற ழைக்கின்ற
தனைத்தும் போயமய்தியே பின்னை 65

பூட்டி னெய்த்தனைப் புடவையா யுடுப்பார்
போர்வையாய்ப் போர்ப்பதுஞ் செய்யார்
சட்டை யாயிதனைத் துன்னியு மிடுவார்
தலைக்கெட் டாக்கொள்வதுஞ் செய்வார்
இட்ட மாயிருந்த படியே வேருவ
மிசைவித் துப்பல பெயரிடுவார்
திட்டமே சீலையெ னுமிடம நிந்தால்
தெய்வத்தின் பேதிப்பு மதுவே
மண்ணிடை முளைத்தாங் கெழுவ கைமனிதர்
மற்றுந்தான் முற்றிட வெல்லாம்
விண்ணினை நோக்கி யெழுகின்ற தல்லால்
வேறொன்றைக் காமித்தா லுளதோ
கண்ணினா விதனைக் கண்டுகொண் டிருந்துபங்
கருத்தினால் நிருவிக்க மாட்டார்
யென்னை மயங்கிக் கெடுகின்ற தல்லால்
யிதயத்திற் றெளிவரோ வியம்பீர் 66

வடம்படக் கோர்வை மணிநுழை நூல்போல்
மன்னுயிராக் கைக்கே யெல்லாம்
இடம்படக் கோர்த்து நின்றதங் கொன்றை
யெனுமிடை யேழைகாள் பாரார்
கடம்பல பேதப்படமாத் திரமே
கடந்தனி லாகாச மேபோல்
உடம்பி னைஒளி பார்த்தபோ தெல்லாம்
ஒருவனே யன்றி மற்றுலிதோ
ஊனின் கண்ணாலே காண்பன வெல்லாம்
முள்போல விருந்தில் லையாகும்
ஞானக் கண்ணாக நாடினா லதுதான்
நன்னெறிக் கோசல்ல யுய்க்கும்
வானந் தந்திட்ட வெள்ளம் பள்ளத்தின்
வழியே போய்வருணம் புக்காப்போல்
ஆனந்த மயத்தின் பக்கலே சென்றங்
கடங்கிடு மறிகின்ற வறிவு 67

அறிய ஞானத்து ளுள்ளத்கன் மையினை
யறியாதாற் கறிவிக்கக் கேண்மின்
யெரியு நீர்த்தீபங் கொண்டிருட் டறையி
லிச்சித்த தொன்றினை யொருவன்
தெரியு றக்கண்டு கொண்டபின் னந்தத்
தீபத்தாற் பயனில தாப்போல்
பெரியவப் பொருளைத் தரப்பட்டார் தமக்குப்
பின்னைஞா னத்தினாற் பயனே

அறியாதொன் றன்னை யறிவிப்பா னொருவன்
அவன்பக் கலறிவு கொண்டவனை
அறிகின்ற னாகக் காட்டுவ தல்லால்
அன்னிய னொருவன்றன் னறிவால்
அறியா தானறிந்தா னாக்கிட வொண்ணா
தாதலா லறிவிக்குங் குருவும்
அறியாதான் பக்கல் முன்னமே யுள்ள
வறிவினை யறிவிப்ப தேகாண் 68

ஓதுவது வாதவு கம்பல வூழி
கற்பங்க ளென்று ரைக்கின்ற
தாவாத காலம னேகம்பல் லுயிருஞ்
சனித்திறந் திவ்வண்ணஞ் சென்றால்
ஓவாது வளர்ந்து வான்முறை யாண்டு
அயினிலே யொடுங்கிடு மயனும்
மாயாது பூதமைந் திலேயெ வர்க்கு
மறியலாம் படியு ரைக்கின்றான்
சுந்தர வானத்தா மரர்கோர் பகலா
அயன்ற னக்கோர் பகலாக
வந்தவவ் விரவும் பகலுமப் படியே
யாண்டா ணதோரீ ரன்பதாகி
வந்திடவ வனுக்கது வும்போய் மாண்டால்
மற்றவர் வாணாளோர் பகலாக
அந்த வாண்டு நூறது சென்ன
றிடில்மா பிரளை யந்தான் 69

அந்தர விசும்பி லயன்மு தலாக
        வகிலாண்ட சராசர முற்றும்
வந்தொரு காலந் தோன்றிடு மாரும்
        மற்றவை மாய்ந்திடு மாரும்
மந்திரத் தோடு மருந்துகள் வல்லோர்
        மாயத்தால் வகுத்துத்தான் காட்டும்
இந்திர சாலஞ் சம்பி ரதாய
        மெல்லையில் யாரறிந் திடவல்லார்
பாரும் பாரதனிற் பிறந்து வாழ்கின்ற
        பல்லுயி ராயதுங் கேட்டு
நீரிடைக் கரந்த பிரளைய மெல்லாம்
        நெருப்பினில் வற்றிய நெருப்புஞ்
சீரிடைக் காற்றுட் சிதைந்த விக்காற்றுத்
        திகழ்வானி லொடுங் குமவ்வானும்
ஆறிடைக் கரந்த தென்று ரைப்போன்
        அங்ஙனே நின்றவப் பொருள்தன் 70

நற்பெருங் காந்த முகத்திலுள் ளிரும்பு
        நயம்படச் சுழலுமா போல
தற்பரம் பொருளின் சன்னதி பெற்ற
        காலத்தே சத்தியா மூலப்
அற்புதம் போலத் தோன்றிமற் றதின்பா
        லகிலாண்ட சராசர முற்றும்
உற்பனமா கியுள போலத் தோன்றும்
        முருவிலாப் பேய்த்தேனா யொத்து

திக்கென மொழியுந் திசைகளு மில்லைத்
திருமுடித் திருவடி யில்லை
பக்கமு மில்லை நடுவில்லை முடியாய்
பரப்பிர் மந்தானே யாகித்
தக்கதோ ரிடைத்தே சமைந்த துமில்லைத்
தன்மய மாகியே யெங்கும்
புக்கெல் லையின்றிப் புறம்பக மின்றிப்
போக்கின்றி நின்றதப்பொ ருள்தான் 71

பகரொடு விசும்பு மிரண்டுந் தாமின்றிப்
பகலிர வென்பதொன் றின்றி
பேரொடு பிறப்பு மியப்புந் தாமின்றிப்
பேசிடுந் தண்மை யொன்றின்றி
வேரொடு வித்தும் முளையுந் தானின்றி
விளம்பிடின் மேன்மை யேயாகி
யாருமங் கொருவ ரின்றித் தானாகி
யிங்ஙனே நின்றதப் பொருள்தான்
சகந்தனில் வாழும யிர்களு முடலுந்
தானின்றித் தன்கணே யொடுங்கி
யுகம்பல ஆழிக் கற்பங்க ளென்றாங்
குரைக்கின்ற யாவையு மொழியப்
பகர்ந்திடும் படிதா னின்றியே யெங்கும்
பரமாத்ம வுருவ மேயாகி
யுகம்புறம் பின்றி யந்தமு மின்றி
யங்ஙனே நின்றவப் பொருள்தான் 72

காலத்தை யறிவானொருவன் றானுள்ளே
காலமூன் றின்றி லையாகுங்
காலத்தை யறிவனெனக்கொடு மனத்தின்
கருத்திறந் தாற்கால முண்டோ
ஞாலத்தி லுயிரு முயரினை வளர்க்கும்
நாதனு நாதமுஞ் சென்று
மூலத்தி லொடுங்கி மூலவேர் சிதைந்தால்
பின்னையு மொளிவகை யுண்டோ
அறிகின்ற தனைத்து நம்மினாலறியப்
படுகின்ற தல்லவோ வன்றேற்
பிரிதுண் டோநம்மிற் பிரமமற் றுண்டோ
பேதிப்பால் வருகின்ற தல்லால்
அறிகின் றான்றானு மறிவிக் குங்குருவு
மறுகின்ற உப்பொரு டானும்
பிரிதலை யானே யெனுமிட மறிந்து
பேசாம லிருப்பதே பெற்றி 73

புற்றின் பாலொருவன் பழுதை யைக்கண்டு
பொருக்கன பாம்பென நினைந்தான்
பற்றினோக் குதலும் பழுதையென் றறிந்து
பாம்பெனும் பயத்தினை விட்டான்
மற்றது போலமனத் தின்கண் ணுலகின்
வாழ்வென்னும் மயக்கத்தின் பயத்தை
யற்ற வக்கணமே யவ்விடத்தே முத்தி
யாவதற் கையுற வுண்டோ

பிறந்த வப்பொழுதே பிள்ளையை யெடுத்துப்
பேச்சோடு கண்காணா விடத்தே
மறைத்திட வைத்தபிள் ளைபோய் வளர்ந்தால்
மனத்திலே யென்னினைந் திருக்கும்
உறைந்த அவ்விடமு மின்னதென் றறியா
னுலகினி லொன்றுந் தானறியான்
அறைந்தன விதனை யறியவல் லார்க்கு
மதுனியி லரியதொன் றுண்டோ 74

உண்மை கண்டவனுக் குலகம் பொய்யுலகுக்
குண்மைகண் டவனும் பொய் யுரைக்கில்
திண்ணென விதனை யறிகமெய் யென்று
தெளிந்தன தேசத்தோ ரியல்பைப்
பண்ணு கின்றாரே யாயினு மனத்துப்
பற்றற்றே நின்றிடு மனைத்துந்
தண்மையங் குடைய சலத்திலே நின்ற
தாமரை சலம்பற்றாப் போல
வான்மு தலாய முக்குணங் களுமன்
றியங்குரைக் கின்றயாவையு மொழிந்து
யானென தென்ன மொழிந்தி டுகின்ற
விரண்டுமற் றிவையெலாங் கடந்து
காணத தானவனாகி நின்றிடுந் தன்மை
சற்குரு வின்பாற் கேட்டறிக 75

வாழ்த்து

தளிகின்ற சமைய மாறினு முள்ள
தவத்தவர் சடங்கு கடவிர்ந்து
களிவிந்த பஞ்சயிந் திரியங் களான
கற்பனா பேதங்கள் கடந்த
வெளிவந்த யெந்தை பரமாத்வா வருளால்
யோக நாயகன் விரித்துரைத்து
தெளிவந்த யோகம லையின் பொருளைத்
தெளிந்தவர் தேவர்க்குந் தேவர் 76

சொல்லடைவுகள்

அ

அகாரமே	31
அங்கிதன்	24
அசல்தரு	8
அசிகர்	55
அந்தணர்	58
அரசு	34
அரிபுத்தன்	61
அருக்கன்	33
அருகன்	61
அலகிலா	2
அழிவிலா	14
அழிவினை	36
அற்புதம்	71
அறம்	4
அறிவு	6
அறுவதுநாள்	12
அன்னம்	10

ஆ

ஆண்டொரு திங்கள்	9
ஆதி	1

ஆலமரம் 10

இ

இதழ் 16
இந்திரசாலம் 70
இருதயம் 24
இருள் 5
இறைச்சி 11
இன்பம் 4

ஈ

ஈசன் 8

உ

உடம்பு 11, 28, 36
உண்மை 75
உதிரம் 11
உருவிலா 64
உலகம் 2

எ

எலும்பு 13, 19

ஒ

ஒழிவிலா 13
ஒளி 39

ஓ

ஓசை 9
ஓதிய 1

க

கண் 3, 25, 34
கடல் 4, 23
கதிரவன் 5
கமலம் 11, 30
கரங்கள் 13
கரு 11
கருத்து 8
கற்பம் 11
காட்சி 37
கால் 11, 28, 40
குரம்பை 13
குரு 6
கேள்வி 2
கை 11, 13

ச

சக்கரங்கள் 9
சங்கு 19
சங்கிலி 33

சடங்கு	76
சதாசிவம்	8
சந்திரன்	22
சமணர்	55
சற்குரு	75
சனித்திரம்	69
சாக்கியர்	55
சாங்கியர்	55
சாதி	5
சாபம்	6
சித்திரகோபம்	34
சிற்பங்கள்	5
சிற்றெரும்பு	9
சிறகிலா	5
சிறுநீர்	19
சிறுமயிர்	12
சுடர்	1
சுந்தரம்	8, 48
செந்தாமரை	16
செவி	12, 15, 21, 25
சோதி	1, 11
சோம்பல்	34

ஞா

ஞானம்	6, 14, 15, 31

த

தசை	13
தப்புகள்	8
தலை	12
தாமரை	75
தியானம்	4
திருக்குறள்	33
திருமுடி	71
திருவருள்	7
தெய்வம்	7, 10, 31
தேசம்	75
தேவர்	2, 11, 76
தொழில்	5, 12, 19, 42

ந

நண்ணிடம்	3
நரம்பு	13
நரகம்	20
நாற்றம்	7
நாழிகை	10, 24, 26
நீதி	1
நுண்பொருள்	6
நெய்	8, 31
நெல்லிக்காய்	39

நேர்பாடு	1

ப

பகலிருள்	8
பதரம்	6
பரமாத்மா	76
பல்லுயிர்	16
பலகோடி	9
பனுவல்	2
பாணன்	19
பாம்பு	24
பிரமம்	1, 6, 28, 57
பிறப்பு	6
புருவம்	24
புலமை	2
புற்று	74
பூதம்	8
பெண்	10, 19
பெருமை	10
பொருள்	4
பொய்	3, 34, 25
பேரொளி	7

ம

மரணம்	63
மரி	1, 29

மருள்	2
மலம்	19
மலரும்	7
மறைநூல்	6
மறையோர்	32
மாத்திரை	36, 39, 40
மாயை	7
முனிவர்	2
மூக்கு	12, 16, 23, 24
மூலம்	8, 13
மூளை	11, 24
மொழி	2, 10, 24, 38

வ

வண்ணம்	10, 12, 70
வாணிபம்	5
வாய்	12
வாயு	8, 13, 36, 37, 44, 45
வான்மீன்	5
விச்சை	5
விரல்கள்	12, 16, 19
வினை	4
வீடுகள்	4
வெண்ணை	8
வெய்யோன்	62
வெளி	1
வேதம்	56
வேர்	10

பாடற் முதற்குறிப்பு அகராதி

அங்கிசையென்னும்	59
அண்டந்தானொன்றி	12
அந்தர விசும்பி	70
அசல்தரு வானில்	10
அகாரமே முதலா	31
அருக்கன் மண்டலமா	33
அவற்றை நாளாமை	21
அறிய ஞானத்துள்	68
அறுவது நாள்	18
ஆதியை யகண்ட	1
ஆலமரவித்தின்	13
இத்தனையுஞ் சென்றி	16
இன்று சாவாரை	53
இரவியை யாதல்	47
இருதய நீதன்னிலி	35
இலங்கு நீரோதங்	32
ஈண்டு மைம்பூதம்	11
உண்மை கண்டவனுக்கு	25
உத்திரா யணஞ்	45
உந்தியா மதனை	58
உவ்வெனும் எழுத்தே	60
உடம்பு நாணல்லே	64

உருபத்தி லுள்ளே	44
உலகந்தா னென்பது	2
ஏதமென் றில்லா	30
ஒன்றினை மனத்தான்	38
ஒன்றெலர் நின்ற	7
ஒருவனுக்கொருவன்	65
ஓசையே பரிசமொளி	9
ஓதுவது வாதவு	69
கட்டினானொருவன்	62
கண்ணினிற் காணா	3
கண்ணொடு செவி	25
கரங்களே கையாய்	23
காட்டத் தாலாங்கி	50
காலத்தை யறிவா	73
காலெலும் பிரண்டு	28
கீறிடும் வெகுளி	22
குண்டலி தானங்	27
கெற்ப பாத்திரத்தில்	15
சத்தியந் தானந்த	34
சந்திர னாதலி	48
சலவுரு வாகி	57
சாத்திரஞ் சொற்பனஞ்	43
சிறப்புடன் நிற்ப	19
சுக்கிலம் பெருத்தா	17
சுழினையார் நாடி	24
தமக்குதா மின்னி	5
தளிகின்ற சமைய	76

தமிழினை யெடுத்துத்	4
தேகமாய் நின்ற	40
தோயத்தாற் குடத்தை	49
நற்பெருங் காந்த	71
நிறைந்தெங்கும் நிறை	8
நெத்திக்கு நேரே	51
பகரோடு விசும்பு	72
பதரது போலவு	6
பவமவை யனேகம்	14
பிரமனைப் பிடித்து	52
புத்தியாற் பெரியோர்	61
புற்றின் பாலொருவன்	74
பூட்டி னெய்த்தனை	66
பேரியை பிராணன்	66
பொம்மென வீசி	55
மண்ணினாற் செய்த	54
மலந்திக முடம்பில்	6
மலைநிலை யூடம்	39
மனமொன்றை நினைக்க	42
மாதாவின் னுதரத்	20
மின்னொளி யெண்ணின்	41
மூச்சதிஏக்த மூலாதா	29
வடம்படக் கோர்வை	67
விண்ணிடைத் தோன்றித்	37
வேண்டின வுருவ	63
வேதம் பொய்யா	56